நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு நான்கு அரசர்கள் ஆட்சி புரிந்திருக்கின்றனர். ஒவ்வொரு அரசனும் சராசரியாக 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர் என்று எடுத்துக் கொண்டால், கி.பி.3-ம் நூற்றாண்டில் சேர மன்னர்களின் ஆட்சி முடிவடைகிறது. எனவே கி.பி.மூன்றாம் நூற்றாண்டோடு சங்க காலம் முடிவுறுகிறது என்று கூறலாம்.

இவ்வாறு சங்க காலத்தின் துவக்க காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு எனவும், அது முடிவுற்ற காலம் கி.பி.மூன்றாம் நூற்றாண்டு எனவும் ஆதாரங்கள் மூலமாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

⁂

5) சங்க காலம் – சான்றுகள்

(SANGAM AGE - SOURCES)

சங்க காலத்தைப் பற்றிய அடிப்படைச் செய்திகளை அறிவதற்கு நமக்கு பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஒரு நாட்டின் வரலாறு அந்த நாட்டில் கிடைக்கின்ற வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையிலேயே எழுதப்படுகின்றன. கி.பி.7-ம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் என்று அழைக்கப்பட்ட திருநாவுக்கரசர் தன்னுடைய பாடல்களில் சங்கம் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறார். இறையனார் அகப் பொருள்பாயிரம் என்ற நூல் சங்கத்தினைப் பற்றிய விரிவான செய்திகளைக் கொண்டிருக்கிறது. அதுதான் மூன்று சங்கங்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. சங்க கால தமிழகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குக் கீழ்க்கண்ட ஆதாரங்கள் நமக்குப் பெரிதும் உதவுகின்றன.

1) கல்வெட்டுச் சான்றுகள்

a) பிராமி கல்வெட்டுக்கள்

இவைகள் தான் தமிழகத்தின் முதன்மைக் கல்வெட்டு ஆகும். இவை அறிவர் என அழைக்கப்படும் சமணத் துறவிகள் தங்கியிருந்த குகைகளில் காணப்படுகின்றன. இவைகளது காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு ஆகும்.

b) அசோகரது கல்வெட்டுகள்

அசோகர் காலத்து 2-ம் நம்பர் குகைக் கல்வெட்டுகள் தமிழகத்தில் ஐந்து தனி நாடுகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. அவை சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர், கேரளபுத்திரர், தாமிரபரணி ஆகியவை ஆகும். இவைகளின் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு